நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.6, மதுரை.
முன்னிலை : திரு. M. ஆனந்த், B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.6, மதுரை (மு.கூ.பொ.)
2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27–ம் நாள் திங்கட்கிழமை
குற்றபல்வகை மனு எண். 2753/2026

1) தங்கமலை (43/2026),
த/பெ. நாகராஜ்

2) ஆதி (21/2026),
த/பெ. செல்வம்

...மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகள்

/எதிர்/

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
திருநகர் காவல்நிலையம்,
மதுரை.
குற்ற எண். 91/2026.
u/s. 303(2) BNS

...எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனுவானது இன்று என் முன்னிலையில் விசாரணைக்கு வரப் பெற்று, மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மகேஸ்குமார் அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், மனுவையும் மனுவை சார்ந்த சகல ஆவணங்களையும் பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

உத்தரவு

1. மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகள் கடந்த 11.04.2026–ம் தேதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகள் எந்த குற்றமும் செய்யவில்லை என்றும், மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகள் சட்டத்தை மதித்து நடக்கும் நபர்கள் என்பதால் தலைமறைவாக மாட்டார் என்றும், மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகளை பிணையில் விடும்பட்சத்தில் தகுந்த ஜாமீன்தாரர்களை முன்நிறுத்த தயாராக உள்ளார்கள் என்றும், எனவே

ANAND M
Digitally signed by ANAND M
Date: 2026.04.27 17:47:41 +0530

மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகளை பிணையில் விடக்கோரி மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகளின் தரப்பில் பிரிவு 480 ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு வாதம் முன் நிறுத்தப்பட்டது.

2. அரசுத்தரப்பில், இவ்வழக்கானது புலன் விசாரணையில் உள்ளதாலும், வழக்கின் 1–ம் எதிரிக்கு ஏற்கனவே 6 முன்வழக்குகள் உள்ளது என்பதாலும், மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகளை பிணையில் விடும் பட்சத்தில் மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகள் இதே போன்று குற்றச் செயலில் ஈடுபட வாய்ப்புள்ளதாலும், வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைக்காமல் தலைமறைவாக வாய்ப்புள்ளது என்பதாலும், சாட்சிகள் மற்றும் சாட்சியங்களை அழிக்க வாய்புள்ளதாலும், மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகளை ஜாமீனில் விட கடுமையாக ஆட்சேபணை தெரிவித்து கொள்ளப்பட்டது.

3. மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகள் தரப்பு மற்றும் அரசுத்தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

4. வழக்கின் வாதி தனக்கு பழக்கமான மதுரை, தனக்கன்குளம், முல்லை நகரில் உள்ள Tasmac உள்ள பில்டிங்கின் ஓனரை பார்ப்பதற்காக வாதிக்கு சொந்தமான TN 60 D 1771 என்ற எண்ணுள்ள TVS XL Super Green Color மொபட்டில் கடந்த 10.04.2026–ம் தேதி மதியம் 2 மணியளவில் சென்று மேற்படி Tasmac கடையின் முன்பு இருசக்கர வாகனத்தை சாவியுடன் நிறுத்திவிட்டு சென்ற நிலையில் எதிரிகள் 3 பேர் மேற்படி வாதிக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை திருடிச்சென்றதாக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது வழக்கு ஆவணங்களில் இருந்து அறிய முடிகிறது.

5. மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகளை பிணையில் விடக் கோரி மனு தாக்கல் செய்துள்ள நிலையில், அரசுத் தரப்பில் கடுமையாக ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகள் கடந்த 11.04.2026–ம் தேதியன்று கைது செய்யப்பட்டு 17 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வரும் நிலையில், இவ்வழக்கானது ஆரம்பகட்ட புலன் விசாரணையில் உள்ளதாலும், வழக்கின் மனுதாரர்/1–ம் எதிரிக்கு ஏற்கனவே 6 முன்வழக்குகள் உள்ளது

ANAND M Digitally signed by ANAND M Date: 2026.04.27 17:47:46 +0530

என்பதாலும், மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகளை பிணையில் விடும்பட்சத்தில் வழக்கின் புலன் விசாரணை பாதிக்கக்கூடும் என்பதை கருத்தில் கொண்டும், மனுதாரர்கள்/1,3–ம் எதிரிகளின் இந்த பிணை மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

6. முடிவாக, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 27.04.2026–ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

ANAND M

Digitally signed by ANAND M
Date: 2026.04.27 17:47:52 +0530

நீதித்துறை நடுவர் எண்.6,
மதுரை (மு.கூ.பொ.)